7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, சனவரி மாதம் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 27.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மன்னார் | மன்னார் நகரம் | மாந்தை தெற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மன்னார் நகர பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மன்னார். |
| மன்னார் | மடு | பாலம்பிட்டி பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மாந்தை மேற்கு பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மன்னார். |

12-283

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

தமிழ் மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் பதிவாளர் பதவி - கிளிநொச்சி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை வயது 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழில் சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, சனவரி மாதம் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, திசெம்பர் 01.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| கிளிநொச்சி | கரச்சி | வட்டகச்சி பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கரச்சி பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி. |

## நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

### சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதியைச் சேர்ந்த செயலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2023 (திறந்த அடிப்படை)

சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் நிறைவேற்று வகுதியைச் சேர்ந்த செயலாளர் பதவிக்கு காணப்படுகின்ற வெற்றிடத்துக்கு தகைமைவாய்ந்த ஒருவரை தெரிவு செய்துகொள்வதற்காக அமைச்சரவையின் கட்டளைக்கு அமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, இலக்கம் 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் நிறைவேற்று வகுதியைச் சேர்ந்த செயலாளர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி 2024.01.15 ஆந் திகதியாகும்.

**குறிப்பு** : விண்ணப்பப்படிவம் அல்லது அது சம்பந்தமான கடிதமொன்று தபாலில் காணாமல் போனதாக அல்லது தாமதமானதாக சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் பற்றிக் கவனம் செலுத்தப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய நட்டங்கள் மற்றும் இழப்புக்களை விண்ணப்பதாரிகள் தாங்கிக் கொள்ளல் வேண்டும்.

01. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளும் முறை** -

அவி/ 16/ 0927/ 755/ 008 ஆம் இலக்க 2016.06.14 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய நியமனம் செய்யப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் மூலம் வழங்கப்படுகின்ற புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்துகொள்ளல் மேற்கொள்ளப்படும். நியமனம் அமுலுக்கு வரும் திகதி அமைச்சரவையின் கட்டளைக்கு அமைய தீர்மானிக்கப்படும்.

02. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையதுமாகும். உங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்குக் கட்டுப்படுதல் வேண்டும். நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அடிக்கடி விதித்துரைக்கப்படுகின்றவாறு நீங்கள் அதற்குப் பங்களிப்புக்களைச் செலுத்த வேண்டும் ;

(ii) சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதியின் தரம் I ஐச் சேர்ந்த செயலாளர் பதவிக்குரிய III ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்திபெறாத அலுவலர் ஒருவர் எனின், பதவிக்கு நியமனம் செய்யப்பட்டு ஒரு வருட காலப்பகுதிக்குள் III ஆம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 01/ 2014 மற்றும் விளைவாய்ந்தன்மை வாய்ந்த சுற்றறிக்கைகளுக்கு அமைய மொழித்தேர்ச்சி மட்டத்தை 05 வருடங்களுக்குள் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அரசகரும மொழி அல்லாத மொழி மூலம் சேவையில் இணைந்துகொள்ளும் அலுவலர்கள் 03 வருடங்களுக்குள் ஒரு அரச கரும மொழி பற்றிய தேர்ச்சியையும், 05 வருடங்களுக்குள் மற்றைய மொழி பற்றிய தேர்ச்சியையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும் ;

(iv) அமைச்சரவை தீர்மானங்கள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களம் சார் ஏனைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் கட்டுப்படுகின்றது.

03. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு, அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 3/ 2016 எனும் சுற்றறிக்கைக்கு அமைய SL-1-2016, ரூபா 47,615.00-10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 1,10,895.00 ஆன (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். தர முறையின் அடிப்படையிலான ஆரம்ப சம்பள நிலை ரூபா 76,175.00 சம்பள படிநிலை 20 ஆகும்.

04. **தகைமைகள்** :

04.01 *கல்வித் தகைமைகள்*.-

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டுள்ள சட்டத்துறை பற்றிய பட்டப் பின் படிப்பை பெற்றிருத்தல்.

04.02 தொழில்சார் தகைமைகள்.-

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக 15 வருட கால தொழில் அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

04.03 அனுபவம்.-

ஏற்புடையதன்று.

05. **வயதெல்லை**.- ஆகக்குறைந்த வயது 35 வருடங்கள் அதிகூடிய வயது 50 வருடங்கள் (ஏற்கனவே அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுவதனால் வயதெல்லை ஏற்புடையதன்று.)

06. **உடல்சார் தகைமை**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை யாற்றுவதற்கும். பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல்சார் மற்றும் உளவியல்சார் தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

07. **ஏனைய தகைமைகள்**.-

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதியில் மேற்படி தகைமைகளை சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

08. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.-

அவி/ 16/ 0927/ 755/ 008 ஆம் இலக்க 2016.06.14 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைய அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைய நியமனம் செய்யப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் மூலம் புள்ளிகள் வழங்கப்படும். கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போதே தகைமைகள் பரிசோதிக்கப்படும்.

09. கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போது புள்ளி வழங்கும் முறை -

| புள்ளி வழங்க வேண்டிய துறைகள் | மொத்தப் புள்ளி | சித்தியடைந்த புள்ளி |
|---|---|---|
| மேலதிக கல்வித்தகைமைகள் | 45 | ஏற்புடையதன்று. |
| உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சிகள் | 20 | |
| விண்ணப்பதாரிகளினால் வெளியிடப்பட்டுள்ள சட்ட ஆய்வுகள் பற்றிய வெளியீடுகள் | 20 | |
| மேலதிக அனுபவம் | 10 | |
| நேர்முகப் பரீட்சைக் குழுவின் தற்றுணிபின் பேரில் தலைமைத்துவம், ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறமைகளுக்கு | 05 | |
| மொத்தம் | 100 | |

கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய உச்ச புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள விண்ணப்பதாரி செயலாளர் பதவிக்கு நியமனம் செய்யப்படுவார்.

10. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்**.- தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது சகல வகையிலும் பூரணமான விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமாகும்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளை மற்றும் விண்ணப்பதாரிகளினால் முறையாக சான்றுப்படுத்தப்பட்ட ஒவ்வொரு பிரதி சகிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள யாதாயினுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ள செல்லுபடியான தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. (i) விண்ணப்பப்படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு இசைவானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், 22-29 செ. மீ. அளவான A 4 தாளில் தயார் செய்துகொள்ள வேண்டும். இலக்கம் 1-11 வரையான தலைப்புக்களை முதலாம் பக்கத்திலும், 12 முதல் இறுதி வரையான தலைப்புக்களை இரண்டாம் பக்கத்திலும்

உள்ளடக்கும் வகையில் தயார் செய்துகொள்ளல் வேண்டும். அவற்றுக்கான தகவல்களை தமது கையெழுத்து மூலம் தெளிவாக நிரப்புதல் வேண்டும். சகல வகையிலும் பூர்த்தி செய்யப்படாதுள்ள, அடிப்படைத் தகைமைகள் இல்லாத, உரிய திகதியின் பின்னர் கிடைக்கின்ற மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக இல்லாத விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்புச் செய்யாது நிராகரிக்கப்படும். குறித்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையவாறு உள்ளதா என்பதை, விண்ணப்பதாரி ஆராய்ந்து பார்த்தல் வேண்டும் என்றும்,

அவ்வாறல்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்றும் மேலும் அறியத்தருகின்றேன். விண்ணப்பப்படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையத் தயார் செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறியத்தரப்படமாட்டாது.

**கவனிக்க** அ. விண்ணப்பப் படிவத்துடன் எந்தவொரு ஆவணமோ அல்லது பிரதியையோ இணைத்து அனுப்பக் கூடாது.

ஆ. கோரப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஆவணங்கள் அல்லது அவற்றின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

(ii) அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில், அரசாங்க கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் அலுவலர்கள் தமது திணைக்கள/நிறுவனத் தலைவர் ஊடாக விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

*12.* அமைச்சரவையினால் வெளியிடப்படுகின்ற கட்டளைகள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகள், காலத்திற்குக் காலம் அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் நிறைவேற்று வகுதிக்குரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் நிபந்தனைகள் இந்தப் பதவிக்கு ஏற்புடையதாகும் என்பதுடன், இந்த ஆட்சேர்ப்புக்கான அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாதுள்ளதொரு விடயம் தொடர்பில் அமைச்சரவை மேற்கொள்ளும் தீர்மானம் இறுதி முடிவாகும்.

*13.* **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை**.- தாங்கள் அனுப்பும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யாதாயினுமொரு தகவல் உண்மைக்கு முரணானது அல்லது தவறானது என்பது ஆட்சேர்ப்புச் செய்து கொள்ள முன்னர் தெரியவரும் பட்சத்தில் தங்களின் விண்ணப்பதாரி அந்தஸ்து இரத்துச் செய்யப்படும். அவ்வாறான உண்மைக்கு முரணான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் அதற்குரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்டு பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*14.* இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான உரைகளுக்கு இடையே ஏதேனும் இணங்காமை அல்லது ஒவ்வாமை எழும் பட்சத்தில், சிங்கள மொழி மூலமான உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அமைச்சரவையின் கட்டளைக்கு அமைய,

செயலாளர்,
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்
அரசியலமைப்பு, மறுசீரமைப்பு
அமைச்சு.

2023.12.04.

| |
|---|
| இல. ........................................... |
| (அலுவலக உபயோகத்திற்காக) |

மாதிரி விண்ணப்பப்படிவம்

## நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதியைச் சேர்ந்த செயலாளர் பதவிக்கான விண்ணப்பப்படிவம் - திறந்த அடிப்படையில்

01. (அ) முதலெத்துக்களுடன் பெயர் (சிங்களம்/ தமிழில்): ..........................................................................................
..........................................................................................................................................
முதலெத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) ...........................................................................
..........................................................................................................................................

(ஆ) முழுப்பெயர் (சிங்களம்/ தமிழில்) :.......................................................................................................

.......................................................................................................

முழுப்பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) .......................................................................................................

.......................................................................................................

02. நிரந்தர முகவரி (சிங்களம்/ தமிழில்) :.......................................................................................................

.......................................................................................................

03. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :.......................................................................................................

.......................................................................................................

04. தொலைபேசி இலக்கம் : .......................................................................................................

05. தேசிய ஆளடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

06. பால் : ......................

07. பிறந்த திகதி : ஆண்டு :............................... மாதம் :............................... திகதி :...............................

08. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் :............................... மாதங்கள் :............................... நாட்கள் :...............................

09. இனம் :..................................................

10. திருமணமானவரா/ திருமணமாகாதவரா? என்பது :.......................................................

11. பட்டப் பின் படிப்பு பற்றிய விபரம் : ......................

பல்கலைக்கழகம் : ......................

பாடத்துறை : ......................

பட்டம் வழங்கப்பட்ட திகதி : ......................

மொழி மூலம் : ......................

12. சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட திகதி : ......................

13. சட்டத்தரணியாக பெற்றுள்ள அனுபவம் :.................................................

14. விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் 04.02 பந்திக்கு அமைய தொழில்சார் தகைமைகள் :-

(i) ..........................................
(ii) ..........................................
(iii) ..........................................
(iv) ..........................................
(v) ..........................................

15. விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் 09 பந்திக்கு அமைய தொழில்சார் தகைமைகள் :-

(i) ..........................................
(ii) ..........................................
(iii) ..........................................
(iv) ..........................................
(v) ..........................................

16. மொழித்தேர்ச்சி (உரிய நிரலில் ✓ அடையாளமிடுக)

| | மிக்க நன்று | நன்று | சாதாரணம் | பலவீனம் |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

**விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

.................................................. ஆகிய நான் இதில் குறிப்பிட்டுள்ள சகல விடயங்களும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் தெரிவிக்கின்றேன். நான் அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படவோ அல்லது கருணை அடிப்படையிலான மாற்று வழிமுறையாக வினைத்திறனின்மையின் அடிப்படையில் சேவையிலிருந்து ஓய்வுறுத்தப்படவோ இல்லை என்றும், பதவி வெறிதாக்கிய ஒருவராகக் கருதப்படவில்லை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடங்கும் விடயங்கள் எதுவும் உண்மைக்கு மாறானவை என்பது அல்லது தவறானது என்பது என்னைத் தெரிவு செய்துகொள்ள முன்னர் வெளிப்படுத்தப்படுமாயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கு உட்படுவேன் என்றும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவ்வாறான நிலைமை வெளிப்படுத்தப்படுமாயின் எந்தவொரு நட்டஈடும் செலுத்தாது தொழிலில் இருந்து நீக்கம் செய்யப்பட முடியும் என்பதையும் நான் அறிவேன்.

திகதி : ..........

.........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**திணைக்களத் தலைவரின் உறுதியுரை (அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தை திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்) :**

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ........................................................................ ....... என்பவர் இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .................................. பதவியில் சேவையாற்றி வருகின்றார் என்றும், ஒரு தவறு தொடர்பில் எச்சரித்தல் தவிர எந்த வகையிலுமான ஒழுக்காற்று தண்டனைக்கும் அவர் உட்படுத்தப்படவில்லை என்றும், இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் அறியத்தருகின்றேன்.

.........................
அமைச்சுச் செயலாளரின்/
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை.

திகதி :......................................................
பெயர் :......................................................
பதவி :......................................................
அமைச்சு/ திணைக்களம் :......................................................

12-360

---

## இலங்கை நிரந்தர கடற்படையின் கைவினைஞர் பிரிவில் கடலோடிகளுக்கான வெற்றிடங்கள்

1. கடலோடிகளை ஆட்சேர்ப்பதற்கான இலங்கை நிரந்தர கடற்படையின் கைவினைஞர் (ஆண்/பெண்) பிரிவில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

2. பின்வரும் தகைமைகளையுடைய ஆண் மற்றும் பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர கடற்படைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர கடற்படையில் இணைவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) தேசிய இனம் - ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ஆ) வயது - 2024, சனவரி மாதம் 17 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 24 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| (இ) உயரம் | - (ஆண்) 5 அடி 5 அங்குலம், (பெண்) 5 அடி 3 அங்குலத்தை விட குறையாதிருத்தல் வேண்டும். |
| (ஈ) நிறை | - (ஆண்) 47 கிலோகிராம் (105 பவுன்ஸ்) |
| | - (பெண்) 36 கிலோகிராமிற்குக் (80பவுன்ஸ்) குறையாதிருத்தல் வேண்டும். |
| (உ) மார்பு | - 32 அங்குலத்தை விடக் குறையாதிருத்தல் வேண்டும் |
| (ஊ) பார்வை வர்ணப்பதிவு மட்டம் | - STD II |
| (எ) தொலை பார்வை | - இடக்கண் 6/6 மற்றும் வலக்கண் 6/6 (மூக்குக் கண்ணாடிகள் மற்றும் கண்ணாடி வில்லைகள் பயன்படுத்தாமல்) |
| (ஏ) குடியியல்நிலை | - விண்ணப்பதாரிகள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். எந்தவொரு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவரும் பயிற்சி காலத்தின் போது திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். |

**3. வெற்றிடங்கள் (பிரிவுகள்)**

(அ) தகைமையுடைய நபர்கள் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா மூன்று வருட முழு- நேர பயிற்சிநெறிக்காக பின்வரும் பிரிவுகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். (ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை கடற்படைதொழில்நுட்ப நிறுவகம் ஆகியவற்றால் வழங்கப்படும்)

(1) தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (கடற்படை பொறியியல்)
(2) தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (வாகனப் பொறியியல்)
(3) தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (மின் பொறியியல்)
(4) தொழில்நுட்பவியலில் தேசியடிப்ளோமா (மின் மற்றும் தொலைத்தொடர்பு பொறியாளர்)
(5) தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (கப்பலின் அடிப்பாகப் பொறியியல் மற்றும் கப்பற் கட்டுமானம்)

**4. கல்வித் தகைமைகள்**

அ. க.பொ.த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத முயற்சிகளில் கணிதத்தில் திறமை சித்தியுடன் ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் தாய்மொழி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ. க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒன்றுக்கு மேற்படாத முயற்சியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| (1) கணிதப் பிரிவு- இணைந்த கணிதம் -"சாதாரண" சித்தி மற்றும் பௌதிகவியல்- "சாதாரண" சித்தி | கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா |
| (2) விஞ்ஞானப் பிரிவு- பௌதிகவில் -"சாதாரண" சித்தி<br>(3) கணிதப் பிரிவு- இணைந்த கணிதம் -"சாதாரண" சித்தி அல்லது பௌதிகவியல்- "சாதாரண" சித்தி<br>(4) தொழில்நுட்பவியல் பிரிவு- பௌதிகவில் தொழில்நுட்பம் -"சாதாரண" சித்தி மற்றும் தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் - "சாதாரண" சித்தி | கடற்படை தொழில்நுட்ப நிறுவகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா |

5. பந்தி 2 மற்றும் 4 இலுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், பார்வை மற்றும் நிறை என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட உயரம், பார்வை மற்றும் நிறை ஆகிய தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். சேவையில் சிறப்புத் திறமை மதிப்பொன்றைக் கொண்டிருக்கக்கூடிய எந்தவொரு விண்ணப்பதாரியும் இலங்கை கடற்படை தளபதியின் விருப்புரிமையினால் அவர் தேவையான உயரத்தைக் கொண்டிராவிடினும் கருத்திற்கொள்ளப்படுவார்.

**6. சேவை நிபந்தனைகள்**

அ. விண்ணப்பதாரிகள் ஆரம்பத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்களாக சேர்த்துக்கொள்ளப்படுவதுடன் அவர்கள் அடிப்படை பயிற்சிப் பாடநெறிகளுக்கு உட்படுத்தப்பட தேவைப்படுத்தப்படுகின்றனர்.

ஆ. பயிற்சி காலப்பகுதியின் போதும் மற்றும் பின்னரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் கடற்படை சட்டத்திற்கு உட்பட்டவர்களாவர்.

இ. ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அனைவருக்கும் சீருடைகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்.

ஈ. பயிற்சிக் காலப்பகுதியின் போது, இலங்கை கடற்படையினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்களுக்கு வதிவிட வசதிகள் மற்றும் உணவு என்பன வழங்கப்படும்.

உ. பயிற்சிக் காலப்பகுதியின் போது, ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர் ஒருவர் அவரின் விண்ணப்பத்தை நீக்குவதற்கு விரும்புவாராயின், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர் அவரின் பயிற்சிக்காக இலங்கை அரசாங்கத்தினால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களையும் இலங்கை அரசாங்கத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டும்.

ஊ. பயிற்சிக் காலப்பகுதியின் போது, ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவரின் தவறான நடத்தையின் காரணமாக அல்லது அவர் /அவள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர் பொறுப்பாகவுள்ள ஏனைய ஏதேனும் காரணத்திற்காக, அவர் / அவள் கடற்படைச் சேவைக்கு தகுதியற்றவர் என பொறுப்புடைய அதிகாரிகள் தீர்மானிப்பார்கள் எனின், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர், அந்த சந்தர்ப்பத்திலேயே, அவர் /அவள் தனக்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களையும் இலங்கை கடற்படைக்கு திருப்பிச் செலுத்துவதற்கு ஒப்புக்கொண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதிநிதியான கடற்படை தளபதியுடன் ஒரு பிணை ஒப்பந்தத்தில் ஈடுபடல் வேண்டும்.

எ. கடமைகளுக்காகவோ அல்லது பயிற்சிக்காகவோ, அனைத்து கடலோடிகளும் இலங்கையின் ஏதேனும் ஒரு பகுதிக்கு அல்லது ஒரு வெளிநாட்டுக்கு இணைப்பட்டிருப்பதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

7. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்** - தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்தின் கீழ்வரும் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்கனவேயுள்ள மற்றும் சட்டமாக்கக்கூடிய அனைத்து கட்டளைகள் மற்றும் சட்டவாக்கத்திற்கும் கீழ்படிய வேண்டும்.

8. **சம்பளங்களும் கொடுப்பனவுகளும்**.- 03/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கிணங்க 2020.01.01 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். அதற்கிணங்க,

| | | |
|---|---|---|
| அ. | அடிப்படைச் சம்பளம் | - ரூ.30,140.00 |
| ஆ. | வாழ்க்கைச் செலவுப் படி | - ரூ. 7,800.00 |
| இ. | சீருடை சுத்தம் செய்தல் படி | - ரூ. 350.00 |
| ஈ. | கடினப்படி (கஷ்டப் பிரதேசங்களுக்காக) | - அடிப்படை பயிற்சிக்குப் பிறகு உரித்துடையது. |
| உ. | கடினப்படி (கஷ்டமல்லாப் பிரதேசங்களுக்காக) | - அடிப்படை பயிற்சிக்குப் பிறகு உரித்துடையது. |
| ஊ. | வேறு படிகள் - சிறப்புப் படி | - ரூ. 1,000.00 |
| | - சிறப்பு மேலதிகப் படி | - ரூ. 3,000.00 |
| எ. | இடைக்கால கொடுப்பனவு | - ரூ. 5,000.00 |
| | குறைந்தபட்ச முழு சம்பளம் (திருமணமாகாத) | - ரூ. 47,290.00 |
| | (திருமணமான வெளியே வசிக்கும்) | - ரூ. 79,690.00 |

ஏ. ஆண்டொன்றிற்கு மூன்று சோடி புகையிரத ஆணைச்சீட்டுகள் வழங்கப்படும். (கடலோடி, மனைவி, பிள்ளைகள் மற்றும் தங்கியிருப்போருக்கு ஏற்புடையதாகும்.)

ஐ. முகாமில் வசிக்கும் கடலோடிகளுக்கு மாதமொரு தடவை படைவீரர்கள் தங்குமிடத்திலிருந்து அவர்களின் வீட்டிற்கு போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டு அல்லது பேருந்து கட்டணச் செலவு மீளளிப்பு.

ஒ. இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படும் (கடலோடி, மனைவி, பிள்ளைகள் மற்றும் தங்கியிருப்போருக்கு ஏற்புடையதாகும்.)

ஓ. அரசாங்க குடிமனைகளில் வசிக்காத திருமணமான கடலோடிகள் ரூ. 2,400.00 முதல் ரூ. 6,600.00 வரையான வீட்டு வாடகைக் கொடுப்பனவிற்கு உரித்துடையவர்களாவர்.

ஔ. திருமணமான கடலோடிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள குடிமனைகளிலுள்ள வெற்றிடங்களுக்கு ஏற்ப திருமணமான கடலோடிகளுக்கு குடிமனைகள் வழங்கப்படும். அரசாங்க உத்தியோகத்தர்களுக்கிணங்க கட்டணம் அறவிடப்படும்.

க. அடிப்படைப் பயிற்சிக்குப் பிறகு, வெளியே வசிக்கும் திருமணமான கடலோடிகளுக்கு ரூ. 30,000.00 உணவு கொடுப்பனவாக வழங்கப்படுகிறது.

9. **சலுகைகள்:** கடற்படையின் தொழில்நுட்ப பிரிவில் உள்ள கடற்படை வீரர்களுக்கு சிறப்பு பதவி உயர்வு நடைமுறை பின்பற்றப்படுகிறது, இதன் மூலம் தொழில்நுட்ப கடற்படையினர் காலியிடங்கள் அல்லாத பதவி உயர்வுகளுக்கு தகுதியுடையவர்கள் ஆவார்.

10. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**

அ. விண்ணப்பதாரி மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க தெளிவான கையெழுத்தால் தன்னால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2024, சனவரி மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (ஆட்சேர்ப்பு), கடற்படைத் தலைமையகம், த. பெ. இல. 593, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.பதிவுத் தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கைவினைஞர் கடலோடிகளின் ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் தகைமையற்ற விண்ணப்பங்கள் என்பன கவனிக்கப்படமாட்டா. மேலதிக விபரங்களுக்கு, 011-7195162, 011-7195155 ஆகிய இலக்கங்களைத் தொடர்பு கொள்ளவும் அல்லது www.navy.lk எனும் வலைத்தளத்திற்குள் பிரவேசிக்கவும்.

ஆ. அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனங்களில்/சபைகளில்/குடியியல் தாபனங்களிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/கூட்டுத்தாபனங்களின்/சபைகளின்/குடியியல் தாபனங்களின் தலைமை அதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும் மற்றும் விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் விடுவிக்கப்படுவார் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பரீட்சார்த்திகள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் போது அல்லது அவ்வாறு செய்ய வேண்டும் எனக் கூறப்படும் போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்:

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளைக் கொண்ட சான்றிதழ்கள் ;
3. பாடசாலை விடுகைச் சான்றிதழ் ;
4. கிராம அலுவலரின் சான்றிதழ் (விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து 6 மாத காலத்திற்குள் பெறப்பட்டது) ;
5. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட தொழில்சார்/தொழில்நுட்பப் பயிற்சி மற்றும்/அல்லது அனுபவச் சான்றிதழ்கள்(ஏதேனும் இருப்பின்)

6. அண்மையில் பெறப்பட்ட மூன்று நன்நடத்தைச் சான்றிதழ்கள். இதில் ஒன்று விண்ணப்பதாரி இறுதியாகக் கல்விகற்ற பாடசாலையின் அதிபரிடமிருந்தும் மற்றையது விண்ணப்பதாரியை இரண்டு வருடங்களுக்கு மேலாக அறிந்திருக்கின்ற பொறுப்பான நபரொருவரிடமிருந்து அல்லது தற்போதைய தொழில்வழங்குநரிடமிருந்து பெறப்பட்டிருத்தல் வேண்டும். (தொழில் செய்பவராக இருப்பின்)

7. விளையாட்டு மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பான சான்றிதழ்கள்-

(ஈ) ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டப்படும் போது சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்திகளின் விண்ணப்பப்படிவங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(உ) விண்ணப்பப்படிவத்துடன் ஆவணங்கள் அல்லது ஆவணங்களின் மூலப் பிரதிகள் இணைக்கப்படலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படும் சான்றிதழ்களின் ஏதேனும் மூலப் பிரதிகள் காணாமற் போனால் இலங்கை கடற்படை அதற்குப் பொறுப்பாகாது.

11. தேர்வுக்கு முன்னர் அவருடைய/ அவளுடைய விண்ணப்பப்படிவத்தில் உள்ள ஏதேனும் ஒரு கூற்று தவறானது எனக் கண்டறியப்பட்டால் விண்ணப்பதாரி தகைமை இன்மைக்கும் தேர்வுக்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அவர் /அவள் பதவி நீக்கத்திற்கும் உரித்துடையவராவார்.

12. **நேர்முகப் பரீட்சைத் தேர்வுகள் முதலியவை :**

(அ) மேற்குறித்த நிபந்தனைகளைப் பூர்த்திசெய்கின்ற விண்ணப்பதாரிகள் இலங்கை கடற் படையினால் பரிந்துரை செய்யப்பட்ட ஆரம்ப நிலை மருத்துவ பரிசோதனையில் தேர்ச்சி பெற வேண்டும். அதன் பிறகு தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரிகள் தேர்வுக் குழு ஒன்றின் முன்னிலையில் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு தோற்ற வேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரிகள் பூரண மருத்துவப் பரிசோதனைக்குப் பிறகு பின்வரும் உடல் தகைமை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

(ஆ) உடற் தகைமைப் பரிசோதனையில் தேர்ச்சி பெறுவதற்கான தேவைப்பாடுகள் :

| உடற்பயிற்சி | நேரம் (நிமிடங்கள்/ செக்கன்கள்) | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 1600 மீ. ஓட்டம்<br>தள்ளுதல் (Push up)<br>இருத்தல் (Sit up) | 01 நிமிடம்<br>01 நிமிடம் | 09 நிமிடங்கள்<br>12 அல்லது அதற்கு மேல்<br>10 அல்லது அதற்கு மேல் | 11 நிமிடங்கள்<br>08 அல்லது அதற்கு மேல்<br>07 அல்லது அதற்கு மேல்<br>- |

(இ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையின் திகதி, நேரம் மற்றும் இடம் பற்றி வட்ஸ்அப் / மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படுவார்கள். எழுத்து மூலம் அறிவிக்கப்பட மாட்டார்கள். இது தொடர்பான போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

(ஈ) விண்ணப்பதாரி ஒருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அவருடைய/ அவளுடைய ஆளடையாள அட்டையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

(உ) விண்ணப்பதாரி ஒருவரைப் பரிந்துரை செய்ய விரும்பும் எவரேனும் ஒருவர் அவருடைய / அவளுடைய சான்றாதாரத்தினைப் பயன்படுத்தி அவ்வாறு பரிந்துரை செய்தல் வேண்டும். ஏதேனும் வகையிலான ஆதரவளித்தல் அல்லது விண்ணப்பதாரி ஒருவரின் தெரிவில் செல்வாக்குச் செலுத்தல் என்பன அத்தகைய விண்ணப்பதாரியின் தகைமையின்மைக்கு வழிவகுக்கும்.

(ஊ) ஆட்சேர்ப்புக்குத் தெரிவு செய்யப்படாத விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படமாட்டார்கள்.

**குறிப்பு**.- இவ் வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிகளுக்கிடையில் தெளிவின்மை காணப்படும் போது சிங்கள மொழி மூலமான வாசகங்கள் மேலோங்கிக் காணப்படும்.

யூ. வீ. எம். பி பெரேரா, பிஎஸ்சீ,என்டீயூ, யூஎஸ்பி, **ஆர்எஸ்பி,
துணைக் கடற்படைத் தளபதி,
கடற்படைத் தளபதி.

இலங்கை கடற்படைத் தலைமையகம்,
த. பெ. இல. 593,
கொழும்பு 01.

**இலங்கை நிரந்தரக் கடற்படையில் கைவினைஞர்கள் பிரிவில் கடலோடிக்கான பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம்**

1. தேசிய இனம்: ..........................................................................................................................

(இலங்கைப் பிரசையாவது பரம்பரை மூலமா அல்லது பதிவின் மூலமா என்பதைக் குறிப்பிடுக மற்றும் பதிவு மூலமான பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும், திகதியையும் குறிப்பிடவும்)

2. விண்ணப்பிக்கும் பிரிவு (முன்னுரிமை அடிப்படையில்) : ..........................................................................

3. முழுப் பெயர் (தேசிய ஆளடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) :...........................................................

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : .......................................................................................

5. நிரந்தர முகவரி : ..................................................................................................................

6. தபால் முகவரி : ...................................................................................................................

7. பிறந்த திகதி : ......................................................................................................................

8. வயது : வருடங்கள் :................ மாதங்கள் :..................... நாட்கள் : .................. (2024, சனவரி மாதம் 17 ஆந் திகதிக்குள்)

9. உயரம் :................ (அடி மற்றும் அங்குலங்கள்)

மார்பு :................ (அங்குலங்கள்) நிறை :................... (கி.கி.)

10. நிரந்தர முகவரிக்கு அண்மையில் உள்ள பொலிஸ் நிலையம் : ..........................................................

11. மாவட்டம் : .........................................................................................................................

12. தேர்தல் தொகுதி : .................................................................................................................

13. கிராம அலுவலர் பிரிவு :...........................................................................................................

14. தொலைபேசி இலக்கம் : ...........................................................................................................

15. வட்ஸ்அப் (Whatsapp) இலக்கம் : ...............................................................................................

16. குடியியல் நிலை : ...................................................................................................

17. பால் : ....................................................................................................................

18. கல்வி கற்ற பாடசாலைகள் (ஒழுங்கு அடிப்படையில்) : ..................................................................

19. கல்வி கற்ற பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலை/ பல்கலைக்கழகத்தின் பெயர் | தோற்றியுள்ள பரீட்சை | பரீட்சைக்கு தோற்றிய வருடம் | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உள்ளடங்கலாக) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>வேறு | | |

20. பாடசாலை/பல்கலைக்கழகத்திலிருந்து விலகிய பின்னர் செய்த தொழில் பற்றிய விபரங்கள் : (ஏற்புடையதாயின்)

